# போக்குவரத்து துறை

அனுப்புநர்
போக்குவரத்து ஆணையர்
சேப்பாக்கம், சென்னை - 5

பெறுநர்
தமிழ்நாடு வாகன புகை ஆய்வகங்களின்
அசோசியேஷன்,
9, ராஜா சர்முத்தையா நகர்,
பைபாஸ் ரோடு, பழங்காநத்தம், மதுரை-10.

ந.க.எண். உ3/57352/06 நாள் 06.12.06

ஐயா,

பொருள் மோட்டார் வாகனம் - வாகனபுகைச் சான்றிதழ் கட்டாயமாக்குவது - தொடர்பாக

பார்வை தமிழ்நாடு வாகன புகை ஆய்வகங்களின் அசோசியேஷன், மதுரை அவர்களது மனு.

*******

தற்போது அனைத்து வாகனங்களுக்கும் புகைச்சான்றிதழ் பெறுவதை கட்டாயமாக்குவதன்பொருட்டு சரக துணை போக்குவரத்து ஆணையர், வட்டார போக்குவரத்து அலுவலா, இயக்கூர்தி ஆய்வகங்களுக்கு புதிய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

எனவே, வாகனங்களுக்கு தீவிர சோதனை செய்து புகைச்சான்று பெறாத வாகனங்கள் குறித்த அறிக்கை அனுப்புமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

ஒம்/- முத்து ஆனந்த்
போக்குவரத்து ஆணையருக்காக

/ஆணைப்படி/

மாநில போக்குவரத்து அதிகாரியின்
நேர்முக உதவியாளர்

13/12/06.

...பாலை, தினமலர், டி.வி.ஆர்., ஹவுஸ், தினமலர் அவென்யூ, மதுரை – 625

# வாகன புகையை கண்காணியுங்க...!

## போலீசுக்கு வாரியம் அறிவுறுத்தல்

சென்னை, நவ. 24–

காற்று மாசு அதிகரிப்பதால் ஓட்டுனர் உரிமம், வாகன உரிமத்தை பரிசோதிப்பது போல், புகைக்கான சான்றிதழையும் கண்காணிக்க வேண்டும் என, போலீசாருக்கு, மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் அறிவுறுத்தியுள்ளது.


டில்லியில், காற்று மாசு அதிகரிப்பால், பள்ளி, கல்லுாரிகளுக்கு விடுமுறை அளிக்கும் நிலை ஏற்பட்டது. சென்னை போன்ற பெரு நகரங்களிலும், அதுபோன்ற பாதிப்பு ஏற்படுமோ என்ற, அச்சம், மக்களிடம் எழுந்துள்ளது. வாகன பெருக்கத்தால், ஏற்படும் புகையும், காற்று மாசுக்கு முக்கிய காரணமாக உள்ளது.

இது குறித்து, மாசு கட்டுப்பாட்டு வாரிய அதிகாரி கூறியதாவது:

அனைத்து வாகனங்களும், ஆறு மாதத்துக்கு ஒரு முறை, புகை கண்காணிப்பு சான்றிதழ் பெற வேண்டும். போக்குவரத்து போலீசார், ஓட்டுனர் வாகன உரிமத்தை பரிசோதிப்பது போல், புகை கண்காணிப்பு சான்றிதழையும் கண்காணிக்க வேண்டும். சான்றிதழ் இல்லாத வாகனங்கள் மீது, நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வாகன உரிமையாளர்கள், தங்களின் வாகனங்களுக்கு, புகை கண்காணிப்பு சான்றிதழ் பெற்று, காற்று மாசை கட்டுப்படுத்த ஒத்துழைக்க வேண்டும்.

இவ்வாறு அதிகாரிகள் கூறினர்.



### சான்று பெறுவது எப்படி

தமிழகம் முழுவதும் புகை கண்காணிப்பு சான்றிதழ் தர மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின், அனுமதி பெற்ற மையங்கள் உள்ளன. அந்த மையங்களில், புகையை கண்காணித்து சான்றிதழ் தர, டூவீலருக்கு 50 ரூபாய்; காருக்கு 100 ரூபாய் கட்டணம் பெறப்படுகிறது. அவ்வப்போது பெட்ரோல் பங்க்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்படுகின்றன.

நவ.26 ஆன்மிக மலர் **நகை வாங்க நல்ல நாள்**